**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 224/2022**

**Prosecution witness : அ.சா.4** **Date : 24.07.2023**

| | |
|---|---|
| **Name : தினேஷ்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் புதுசாம்பள்ளியில் குடியிருந்து சொந்த தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனது நண்பர் மகன். கடந்த 20.09.2020-ம் தேதி காலை 08.30 மணிக்கு KTM Duke bike ல் மேட்டுரில் இருந்து சாம்பள்ளி செல்லும்போது, டாடா ஏசி மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். விபத்தின் காரணமாக தலையில் அடிப்பட்டது. விபத்து குறித்து சசிகலா என்பவர் தகவல் சொன்னார். மேட்டுர் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கு முன்பாக வைத்து நடந்த பிரேத விசாரணையின் போது நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

2) சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் எண் நான் காவல் நிலையத்தில் சொன்னேன் என்றால் இல்லை. தகவல் யார் சொன்னாகள் என்றால் முருகன் என்பவர் சொன்னார். போலிசார் என்னை எப்போது விசாரித்தனர் என்றால் அரசு மருத்துவமனையில் மதியம் 02.30 மணிக்கு விசாரித்தனர். போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரிலும், இறந்தவர் எனது உறவினர் என்பவதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/-தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 224/2022**

**Prosecution witness : அ.சா.5** **Date : 24.07.2023**

| | |
|---|---|
| **Name : திலகவதி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>முதல் விசாரணை</u>

1) நான் புதுசாம்பள்ளியில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனது மகன். கடந்த 20.09.2020–ம் தேதி காலை 09.30 மணிக்கு டாடா ஏசி வண்டியில் மூன்று பேர் சென்ற வாகனம் மேட்டூர் மலைப்பாதையில் எனது மகன் சென்ற KTM Duke bike ல் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். விபத்தின் காரணமாக எனது மகனுக்கு தலையில் அடிப்பட்டது. எனது மகனை மேட்டூர் அரசு மருத்துவமனையில் கொண்டு சென்று சேர்த்தார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

2) சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தில் யார் யார் அடிப்பட்டது என்றால் எனது மகனுக்கு அடிப்பட்டது மட்டும் எனக்கு தெரியும். சம்பவம் யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**